HOLY CROSS COLLEGE
ESTD 1965
NAGERCOIL - 629 004.

# யுவதி

HOLY CROSS COLLEGE
STUDENT COUNCIL

ஜனவரி - மார்ச் 2024

காலாண்டு இதழ்




HOLY CROSS COLLEGE (AUTONOMOUS)
A SYMPHONY OF GRATITUDE
HAPPY FEAST

# யுவதி

காலாண்டு இதழ்

ஜனவரி - மார்ச் 2024

ஆண்டு - 1 இதழ் - 2



**ஆசிரியர்**

முனைவர் **ம. மேபல் எடல் குயின்**

**கௌரவ ஆசிரியர்**

முனைவர் **அ. லெஸ்லி பாத்திமா**

**வெளியீட்டாளர்**

**மாணவியர் பேரவை**
**ஹோலி கிறாஸ் கல்லூரி,**
**நாகர்கோவில்**

**ஆசிரியர் குழு**

- **பி. ஷிமர்னா**
  மாணவியர் பேரவைத் தலைவி
- **ச. அஷானி**
  மாணவியர் பேரவைத் துணைத்தலைவி
- **அ. சான்ட்ரா**
  மாணவியர் பேரவைச் செயலர்
- **ச. ஸ்டெஃபீரா**
  மாணவியர் பேரவை இணைச் செயலர்

**புறநிலை ஒழுங்காற்றுநர்**

திரு. சி. **விஜய்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)
பாளையங்கோட்டை

**உரிமையாளர்**

- முனைவர் அருட்சகோதரி **மேரி ஹில்டா**
  கல்லூரிச் செயலர்
  ஹோலி கிறாஸ் கல்லூரி, நாகர்கோவில்
- முனைவர் அருட்சகோதரி **சகாய செல்வி**
  கல்லூரி முதல்வர்
  ஹோலி கிறாஸ் கல்லூரி, நாகர்கோவில்


# தலையங்கம்

புத்தகம் படித்தல் என்ன செய்யும்?

வாழ்க்கையைப் புதிதாக்கும், புதுப்புது எண்ணங்களை உருவாக்கும், வாழ்வியலைச் செம்மையாக்கும், உண்மையை உணர வைக்கும், தேடல்களை உருவாக்கும், தனிமையை உணரும் போது நானிருக்கிறேன் என்று தாயின் அன்பைத் தரும். ஆலோசனை தேவைப்படும்போது நண்பனாய் மாறும்.

இத்தனையும் தரும் புத்தகத்தை நாமே எழுதியிருந்தால்? இல்லை அதில் ஒரு பக்கத்தையேனும் எழுதியிருந்தால்? ஏதேனும் ஒரு வகையில் ஒருவரின் பெருங்கனவு நிறைவேற நம் வரிகள் காரணமாகலாம் ஆனால்,

24 மணி நேரங்கள் போதாதென்று நினைக்கும் இந்தக் காலக்கட்டத்தில் மனிதன் வாசிப்புப் பழக்கம் என்ற ஒன்று இருப்பதையே மறந்து விட்டான் என்பது கவலைக்குரியதாகும்.

மனித இனம் எல்லாச் சூழல்களிலும் எழுத்து எனும் உளி கொண்டு வாழ்வெனும் சிற்பத்தை வடிவமைக்கும் போதும் அதனை வாசிப்பு எனும் தூரிகை கொண்டு மெருகூட்டும் போதுதான் சிறப்புப் பெறுகிறது.

எழுதுங்கள், எழுத்துகளை நேசியுங்கள் அதைச்சற்று சுவாசியுங்கள்.

முனைவர் **ம. மேபல் எடல்குயின்**



# சமூக நீதியின் காவலர்

# கலைஞர்



**Reema Berty**
II BA English (SF)

## முன்னுரை

உலகத்தமிழ் மக்களின் மனத்துடிப்பாக இருக்கும் ஒரே வார்த்தை கலைஞர்! தமிழர்களின் உரிமைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தனது வாழ்நாள் முழுவதும் உழைத்தவர்; குரல் கொடுத்தவர் கலைஞர். எழுத்தாய் நிலைத்துச் சொல்லாய் இருந்து பொருளாய் விளைந்தவர் கலைஞர். தமிழன்னையின் முத்தமிழ் பாலையும் முழுவதும் பருகிய மூத்தமகன் கலைஞர்! முதிர்ந்த வயதிலும் மூச்சிலே தமிழ்க்காற்றைச் சுவாசித்த சங்கத்தமிழன் கலைஞர்! இருளில் கிடந்த மக்களுக்கு ஒளி கொடுத்த சூரியன் கலைஞர்!

## பிற்படுத்தப்பட்டோர்களுக்கான திட்டங்கள்

தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், சிறுபான்மையினர், சமுதாயத்தில் அடித்தட்டுத்தளத்தில் இருக்கக்கூடியவர்களுக்காக வாழ்ந்து காட்டியவர் கலைஞர்! அவர்களுக்காகப் பல திட்டங்களைக் கொண்டுவந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பாடுபட்ட ஒரு தலைவர் கலைஞர். இந்திய அளவில் 50 சதவிகித இட ஒதுக்கீடு என்பது இருந்தபோது 69 சதவிகித இடத்தைப் பிற்படுத்தப்பட்டோருக்கு கொடுத்துச் சரித்திரம் படைத்தவர் கலைஞர். சிறுபான்மையினர் உரிமைக்காக இந்தி அரசியலில் முதன்முதலில் குரல் கொடுத்தவர் கலைஞர்.

## பெண்களுக்குச் சம உரிமை

பெண்களுக்குச் சம உரிமை வழங்க வேண்டும் என்றும் சுயமரியாதைக்காகவும் பேசியவர் கலைஞர். பெண்களுக்குச் சம உரிமை, சமத்துவம், சமூகநீதி ஆகிய கொள்கைகளுக்காகப் போராடியவர் கலைஞர்! கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தி சமூக நீதியை நிலைநாட்டியவர் கலைஞர்! உள்ளாட்சி மன்றங்களில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வேலைவாய்ப்பில் 30 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி பெண்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்டவர் கலைஞர். சொத்தில் பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்று சட்டம் கொண்டுவந்தவர் கலைஞர். தமிழ்நாடு காவல் துறையில் முதன் முதலாவதாகப் பெண்களைப் பணியமர்த்தியவர் கலைஞர்.

## இலவசக் கல்வி

இலவசக் கல்வி தந்தவர் கலைஞர். தொழில்துறை கல்வியில் கிராமப்புற மாணவிகளுக்கு 15 சதவிகிதம் இட ஒதுக்கீடு தந்தவர் கலைஞர். மாணவர்களுக்கு இலவச பஸ்பாஸ் திட்டம் கொண்டு வந்தவர் கலைஞர். சத்துணவில் முட்டை வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர்.

## இலவச மின்சாரம்

தமிழ்நாட்டின் அனைத்துக் கிராமங்களும் மின்சாரத் தன்னிறைவு பெற காரணமானவர் கலைஞர். இந்தியாவிலேயே முதன் முதலாக விவசாயத்திற்கு இலவச மின்சாரம் தந்தவர் கலைஞர்.

## நலவாரியங்கள்

மாநிலத் திட்டக்குழுவை முதன் முதலில் உருவாக்கியவர் கலைஞர். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கி ஏழை மக்களை அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு நகர்த்தியவர் கலைஞர். பிச்சைக்காரர்களுக்கென்று மறுவாழ்வு மையம் தொடங்கியவர் கலைஞர். ஒடுக்கப்பட்டோருக்கு இலவச கான்கிரீட் வீடுகள் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்தவர் கலைஞர். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் தனியாகத் துறைகள் அமைத்தவர் கலைஞர். மீனவர் நலன் காக்க இலவச வீடு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர். கோயில்களில் குழந்தைகளுக்கான கருணை இல்லம் அமைத்தவர் கலைஞர். அருந்ததியினருக்கு உள் ஒதுக்கீடு வழங்கியவர் கலைஞர்.



## நல்வாழ்வுத் திட்டங்கள்

ஏழைப்பெண்கள் திருமண நிதி உதவித்திட்டம், விதவைப் பெண்கள் மறுமண நிதி உதவித்திட்டங்களைக் கொண்டுவந்தவர் கலைஞர். கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதி உதவித்திட்டத்தைத் தந்தவர் கலைஞர். மகளிர் சுய உதவிக்குழுக்களை அமைத்தவர் கலைஞர். இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தை உருவாக்கியவர் கலைஞர். இந்தியாவிலே முதன் முதலாக மருத்துவக் காப்பீடு திட்டத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர். 'வருமுன்காப்போம்' திட்டம் கொண்டு வந்தவர் கலைஞர். சிறுபான்மையினர் பொருளாதார வளர்ச்சி அடைய தனி அமைப்பை ஏற்படுத்தியவர் கலைஞர். குடிநீர் வாரியம், உழவர்சந்தை எனப் பல்வேறு சமூக நலத்திட்டங்களைக் கொண்டு வந்தவர் கலைஞர்.

## கை ரிக்ஷா ஒழிப்பு

மிகப்பெரிய மனித உரிமை மீறலான கையால் இழுக்கும் ரிக்ஷாவை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷாவை அறிமுகப்படுத்தியவர் கலைஞர்.

## மேலும் பல திட்டங்கள்

சமத்துவபுரங்களை அமைத்தவர் கலைஞர். ஊனமுற்றோர் என்ற சொல்லை மாற்றி மாற்றுத்திறனாளி என்று பெயர் வைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும், திருநங்கைகளுக்கும் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை வழங்கியவர் கலைஞர். கலைஞர் வீட்டுவசதித் திட்டம், பசுமை வீடுகள் திட்டம் கொண்டுவந்தவர் கலைஞர். கண்ணொளித் திட்டத்தின் மூலம் இலவச கண் சிகிட்சை முகாம்களை ஆரம்பித்துவைத்தவர் கலைஞர். இஸ்லாமியர்களுக்கு முதலாவதாக இட ஒதுக்கீடு அளித்த பெருமை கலைஞரையே சாரும் ஆசியாவிலேயே முதன் முதலாகக் கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியல் பல்கலைக்கழகத்தை அமைத்தவர் கலைஞர்.

## முடிவுரை

மிகச்சிறுபான்மை சமூகத்திலிருந்து ஒருவர் முதலமைச்சராக முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர் கலைஞர். சுதந்திர தினத்தன்று மாநில முதல் அமைச்சர்களும் தேசியக் கொடியை ஏற்ற வழி வகை செய்தவர் கலைஞர். நமக்கு நாமே திட்டம் கொண்டு வந்து உலகத் தமிழ் மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றவர் கலைஞர்.

**"சங்கத்தமிழும் உன்னை வாழ்த்தும்<br>கன்னித்தமிழும் உன்மேல் காதல்<br>கொள்ளும்"**

★★★★★★

# பெயர் தெரியாத பறவையின் கதை...



Written by **Suvedha. R**
III - BA English (SF)



அழகான வாழ்க்கை, இடையூறில்லா அருவி போல், அவளின் வாழ்க்கை இருந்தது. அவளோ, பூப்போன்றவள், கள்ளமில்லாதவள், கள்வனே காதல் சொன்னாலும் அவனை நோகடிக்காது சரி எனச் சொல்பவள். திடீரென, ஒரு சம்பவம் அவளின் வாழ்க்கையை மாற்றிவிட்டது... அவளின் மென்மையான குணமும், நோகடிக்காத தன்மையும் அவனை மாற்றிவிட்டது. தினமும் காலையில் எழுந்தவுடன், கைபேசி எடுப்பது வழக்கம். அன்று தென்றல் காற்றை ரசித்தபடி “ஃபிரீ ஃபயர்” கேம்குள் நுழைந்தாள். எதிர்பாராத விதமாக, அன்று ஒரு முகம்தெரியாத நபர் அவளிடம் பேசத்தொடங்கினான். நண்பனாக நுழைந்த அவன் காதலனாக ஆகவே, நாள்கள் நீண்டன, வீட்டிற்குத் தெரியாமல், பூங்கா, கடற்கரைக்குச் சென்றனர். அடிக்கடி பார்க்கும் தூரத்தில் அவர்கள் இல்லை, அவளைப் பார்த்துச் செல்ல அவன் விரும்பவே, அவளும் மறுக்கமுடியாமல், சரி எனச் சொல்ல, மறுநாள் காலை, கல்லூரிக்குச் செல்வதுபோல் சென்று, அவனைச் சந்தித்தாள், அன்று அவள் வீட்டிற்குச் செல்ல சிறிது தாமதமாகவே, அவளது வீட்டார், அவள் காதல் செய்கிறாள் என்பதை உறுதி செய்தனர். மறுநாள் காலை அவனின் வீட்டில் தெரிவித்து இருவரையும் பிரித்தனர். விரக்தியில் விஷமருந்தினாள் அவள். ஆனால் கடவுளால் காப்பாற்றப்பட்டாள்... மாதங்கள் கழிந்தன. அதே சமயத்தில் அவனின் அன்பை ஈடுசெய்யவே மற்றொரு நண்பனாக நுழைந்தான். அவனும் அவளின் நோகடிக்காத குணத்தால் காதலனாக மாறுகிறான். அவனும் முகம் தெரியாத நபர்தான், ஆனால் இதுவரை சந்தித்ததில்லை. மீண்டும் அவளின் வாழ்க்கையில் முதல் காதலன் வருகிறான்... இவளுக்கு என்ன சொல்ல எனத் தெரியவில்லை. தனிமையில் அழுகிறாள். யாரிடமும் சொல்ல முடியாத நிலை இவனுக்காக அவனையும், அவனுக்காக இவனையும் விட்டுத்தர முடியாமல் இருநிலை மனதோடு போராடுகிறாள், அழுகிறாள். கள்ளமில்லாமல் இருந்தவள், இருவரையும் ஏமாற்றி அவளையும் ஏமாற்றிக்கொள்கிறாள். ஒருவனின் அன்பிற்கு அடிமையானவள், இருவரின் அன்பிற்கு அடிமையாகிறாள் காதலால் அல்ல, அன்பினால்... நாட்கள் நீண்டன. முதல் காதலனுக்கு உண்மை தெரியவர என்னை அவள் ஏமாற்றிவிட்டாள் என்ற கோபத்திலும், வலியிலும், அவளைத் தகாத வார்த்தையால் அவமானப்படுத்தினான். அவளும் ஏற்றுக்கொண்டாள்... அவளும் அவர்களின் வலியைப் புரிந்து கொண்டாள். இரண்டாம் காதலன் அவளை ஒரு வார்த்தைக்கூட பேச மறுத்தான், அவனின் காதலோ, அவளின் மீதான அன்பைக் காட்டியதைத் தவிர, காமத்தைக் காட்டவில்லை. அந்நிலையில் எதிர்பாராதவிதமாக, இரண்டாம் காதலனின் ஒரு குறுஞ்செய்தியைப் பார்த்த அவள் முழுமையாக, உடைகிறாள், ஏனெனில் தன் தந்தையின் இடத்தில் வைத்திருந்த அவன், இப்படி என்னைப் பேசிவிட்டான், என்று ஆனால் அது முதல் காதலன் பேசிய அளவிற்கு இல்லை, ஆனாலும், அதனை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. அவனின் மீதான நட்பால், காதலால், நம்பிக்கையால், மனதளவில் உடைகிறாள். இருவரைவிட்டும் தூரத்தில் பேசாமல் தன் வாழ்க்கைகயை இடம் தெரியாத, பெயர் தெரியாத இரயிலில் பயணிக்கிறாள் நினைவுகளோடு.,.. அதே நினைவுகளோடு இரண்டாம் காதலனும் போராடுகிறான், மீளமுடியாமல், மறக்கமுடியாமல் அல்ல, மீண்டுவிடக்கூடாது என்று... அவன் என்ற கரையைச் சேருமா, அந்த இரண்டாம் கப்பல்...?

இந்த நிலையில் அவளின் மனநிலை....?

# வாக்குரிமை




## வாக்குரிமை

நாடாளுமன்றம், சட்டமன்றம், நகராட்சி மன்றம், ஊராட்சி மன்றம் ஆகியவற்றிற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தேர்தல்களில் நாட்டின் குடிமக்கள் தங்கள் வாக்குகளை வழங்கிப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவ்வாறு வாக்களிப்பதற்குக் குடிமக்களுக்கு உள்ள உரிமையை வாக்குரிமை என்கிறோம். நாட்டின் வளர்ச்சிக்கும் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கும் வாக்குரிமை இன்றியமையாதது.

## முக்கியத்துவம்

நாட்டை ஆள்வதற்குரிய எல்லா அரசியல் அதிகாரங்களும் நாட்டின் குடிமக்களுக்கே உண்டு என்பது குடியரசின் தத்துவம். குடிமக்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை வாக்குரிமை மூலம் செலுத்துகின்றனர். இந்த உரிமையைப் பயன்படுத்தி தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் சார்பில் அரசை நடத்திவர அவர்களுக்கு அதிகாரம் அளிக்கின்றனர். எனவே, மக்களாட்சி நடைபெறும் நாட்டில் வாக்குரிமை மிக இன்றியமையாத ஒன்றாகும்.

## குறைந்தபட்ச வயது

இந்தியாவில் வாக்களிப்பதற்கான குறைந்தபட்ச வயது வரம்பு 18 வயது நிரம்பி இருக்க வேண்டும்.

## பண்டைக் காலத்தில் வாக்குரிமை

வாக்களிக்கும் முறையைப் பண்டைக்கால முதலே தமிழர்கள் அறிந்திருந்தனர். அக்காலத்தில் ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் மூலம் அவர்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஊர்மக்கள் ஒரு பொது இடத்தில் கூடுவார்கள். அங்குக்கூடியவர்களில் பெரும்பான்மையார் யாரடைய பெயரைச் சொல்கிறார்களோ அவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். இது தவிர ‘குடவோலை’ என்னும் இரகசிய வாக்கெடுப்பு முறையும் அக்காலத்தில் இருந்தது. ஊர்மக்கள் தாங்கள் விரும்புகின்றவர்களின் பெயர்களை ஓலை நறுக்குகளில் எழுதி ஒரு குடத்தில் போடுவார்கள். பின் அக்குடத்தை ஒரு பொது இடத்தில் வைத்து ஓலைகளை எண்ணுவார்கள். யாருடைய பெயர் அதிகமாக ஓலைகளில் இருக்கிறதோ அவர் உறுப்பினராகத் தேர்வு பெறுவார். பண்டைய கிரேக்க, ரோமானியர்களுக்கும் வாக்களிக்கும் முறை தெரிந்திருந்தது. எனினும், பிரதிநிதித்துவ நிறுவனங்கள் ஏற்பட்ட பின்னரே இக்காலத்தில் வாக்குரிமை மிகுதியாகச் செயல்பட்டுவருகிறது. அதன் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்த நாம், வரும் தேர்தலில் 100% வாக்கைப் பதிவு செய்வோம்.

**ஜே. எம். ரெக்ஷினி**
III- BA English (SF)

கதை




# ஒற்றை நாணயம்

ஒரு பெண் தினமும் கல்லூரிக்கு அரசுப் பேருந்தில் செல்கிறாள். ஒரு நாள் 19 ரூபாய் டிக்கெட்டுக்கு 20 ரூபாய் கொடுக்கிறாள். ஆனால் நடத்துநரிடம் சில்லறை அப்போது இல்லாமல் இருந்தது. ஆனால் அவள் தினமும் ஒரே பேருந்தில் பயணம் செய்வதாலும் அந்நடத்துநரைத் தினமும் பார்ப்பதாலும் பிறகு தந்துவிடுவார் என்ற நம்பிக்கையோடு பேருந்தில் உள்ள முன் இருக்கையில் சென்று அமர்ந்தாள். நடத்துநர் மீதம் கொடுக்க வேண்டியிருந்த ஒற்றை நாணயத்தை அவளிடம் கொடுக்கும்படி முன்னே அனுப்பி வைத்தார். அப்போது தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த ஆசிரியர், ஒற்றை நாணயம் தன்னுடையது என எண்ணி அவரிடம் வைத்துக்கொண்டார். அப்பெண் தன்னுடைய இடம் வந்ததும் பேருந்திலிருந்து இறங்கி சென்றுவிட்டாள். ஆசிரியர் அந்த ஒற்றை நாணயத்தோடு வேறு சில்லறைகளைச் சேர்த்து மொத்தமாக ஒரு பெட்டிக்கடையில் கொடுத்து தன் வகுப்பு மாணவர்களுக்கு மிட்டாய் வாங்கிச் சென்றார். அந்த நாணயம் அப்பெட்டிக்கடையில் பல நாள் இருக்கிறது. அந்நாணயத்திற்கு ஒரே கவலை, என்னவென்றால் எப்படியாவது தன் கடமையை முடிக்க வேண்டும் என்று, எப்படியாவது அவளிடம் போய் சேரவேண்டும் என்று ஒரு நாள் நிறைய நாளிதழ்களை அந்தப் பெட்டிக்கடையில் கொடுத்துச் சில்லறைகளை வாங்கிச் செல்கிறான். ஒருவன் அதில் அந்த ஒற்றை நாணயமும் இருந்தது. அவன் செல்லும் வழியில் ஒற்றை நாணயம் கீழே விழுந்து விடுகிறது. அதைக் கண்டெடுத்த சிறுமி, ஒற்றை நாணயத்தைக் கோவில் உண்டியலில் போடுகிறாள். அந்த உண்டியலுடன் ஒற்றை நாயணம் தன்னுடைய சோகக் காலத்தைக் கழிக்கிறது. இப்படியே காலங்கள் செல்கின்றன. ஒருநாள் திருடன் ஒருவன் அந்த உண்டியலைத் திருடுகிறான். எப்படியாவது அவளிடம் போய் சேர்ந்துவிட வேண்டும் என்ற எண்ணம் ஒற்றை நாணயத்தை வருத்தியது. திருடிய சில்லறையைப் பணத்திற்கு மாற்றுகிறான் அந்தத் திருடன். இப்படி வேறு வேறு கைகளில் அது சென்று சேருகிறது. பல மனிதர்களைச் சந்திக்கிறது. இறுதியில் அவளிடம் வந்து சேர்கிறது. ஆனால் அப்போது அந்த ஒற்றை நாணயம் அவள் பையில் இல்லை, அவளோடு அந்தப் பேருந்தில் பயணிக்கவும் இல்லை, அவள் கைகளிலும் இல்லை, ஆனால் அவள் நெற்றியில்.

**ரோணி**
II- B.Sc., Computer Science

## கவிதைகள்



# அப்பா

ஆயிரம் கவலை, பொங்கலில்
இருக்கும் Pepper-ஐ போல்
இருந்தாலும்
உடையாத Half Boil போல் தன்
பிள்ளைகளிடம் சிரித்து
அது வேணும் இதுவேணும்
என்று குழந்தை கேட்டாலும்
கேட்காவிட்டாலும்
வாங்கி வாங்கிக் கொடுக்கும்
தந்தையருக்கு
ஒரு மகளாக நன்றி

– ரோணி
II- B.Sc., Computer Science



# காதலும் கடிதமும்

காதலும் கடிதமும் ஒன்றே
எதிர்பார்த்து வாசலில் நின்றாலும்
Postman-வும் Cupid-வும்
ஆர அமர காப்பி
குடித்துவிட்டுதான்
வருவார்கள் போல

– ரோணி
II- B.Sc., Computer Science



# பெண்

மொட்டெடுத்து கட்டும்போது –
அதில்
தப்பித்து பூவானால்
பூவெடுத்து ரசிக்கும்போது – பதில்
பிச்சிப்போடும் மனிதனே

– ரோணி
II- B.Sc., Computer Science



# என் நண்பன்

மிச்சம் இருக்கும்
குளிர்பானத்திற்காக
சண்டையிட்டு வெல்கின்றாய்;
சிந்திடும் கண்ணீரைத் துடைக்க
உன் கைகளைத் தருகின்றாய்;
தடுக்கி விழும்போது
கிண்டல் செய்கின்றாய்;
தடுமாறி விழும்போது
தோள்கொடுத்துத் தூக்குகின்றாய்

மு. வள்ளி
இரண்டாம் ஆண்டு கணினி அறிவியல்



# அழகு

பார்த்தேன் கல்லூரியை
அழகிகள் பலர்
பழகிப் பார்த்தேன்
கல்லூரியே அழகு

– ரோணி
II- B.Sc., Computer Science



# அண்ணல் அம்பேத்கர்

பாரதத் திருநாட்டில் பல்வேறு தலைவர்கள் தோன்றி பல அளப்பரிய காரியங்களையும் நிகழ்த்தியுள்ளனர். சமூக மறுமலர்ச்சிக்காகவும், தீண்டாமைக் கொடுமைக்கு எதிராகவும் மிகப் பெரிய போராட்டம் நடத்தியவர் அம்பேத்கரே ஆவார்.

மராட்டிய மாகாணத்தில் உள் அம்பாவடி என்ற கிராமத்தில் 1871ஆம் ஆண்டு அம்பேத்கர் பிறந்தார். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் பீமாராவ் என்பதாகும். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் சிறு வயதிலேயே பல செல்லொண்ணாத் துயர்களுக்கு ஆளானார். அதுவே பின்னாளில் அவரை ஒரு மாபெரும் சமுதாயப் புரட்சியாளராக மாற்றியது.

இழிகுலத்தவர் என்று சொல்லி வண்டியிலிருந்து கீழே தள்ளிவிடப்பட்டார். நாவிதர்கள் முடிவெட்ட மறுத்தனர். பொதுக்குளத்தில் நீர் எடுக்க அனுமதி வழங்கப்படவில்லை. இந்தக் கொடுமைகள் எல்லாம் அம்பேத்கரைக் கொதித்து எழச்செய்தன. தீண்டாமைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்.

மிகச்சிறந்த கல்வியாளராக உயர்ந்தால்தான் இதற்கெல்லாம் தீர்வு காணமுடியும் என்று உறுதிபூண்டார். இங்கிலாந்து சென்றார் வழக்கறிஞர் பட்டம் பெற்றார்.

சமூக மறுமலர்ச்சிக்காகப் பணியாற்றினார். தீண்டாமைக்கு எதிராக குரல் கொடுத்தார். ஊமையர் தலைவன் என்ற பத்திரிகையையும் நடத்தினார். தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். இந்து மதத்தில் உள்ள மூடநம்பிக்கைகளைத் தீண்டாமைக்கு முழுமுதற்காரணம் என்று உலகிற்கு உணர்த்த புத்த சமயத்தைத் தழுவினார்.

இந்திய விடுதலைக்குப் பின்னர் ஜவஹர்லால் நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பதவியேற்றார். அதோடு இந்திய அரசியல் சாசனத்தையும், சட்ட விதிகளையும் அம்பேத்கரே எழுதினார். அதனால் "சட்டமேதை" என்று இந்திய மக்களால் போற்றப்பட்டார்.

தீண்டாமைக்கு எதிராகப் பல நூல்களையும் படைத்தார். சிறந்த பேச்சாளராகவும் விளங்கினார். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அவர் ஆற்றிய அரும்பெரும் தொண்டின் காரணமாக மக்களின் விடிவெள்ளியாக இன்றளவும் அம்பேத்கர் போற்றப்படுகிறார்.

**ஜெ. இன்பெண்டா ரோஷ்னி**
III - B.A. Tamil



# உங்களுக்குத் தெரியுமா....?



**N.K. Sreeja**
III - B.com (SF-2)

(i) நாம் விளையாடிய பொருட்களிலே அதிக அறிவியலைக் கொண்டது பம்பரம்தான். கயிற்றின் நீளம், வீசும் வேகம், பம்பரத்தின் தலைப் பகுதி எடை, சுழலும் அச்சு, தளத்தின் (நிலம்) தன்மை என எல்லாம் பொறுத்து பம்பரம் சுற்றும் நேரம் மாறுபடும். இதை நாம் சிறுவயதிலேயே கணித்து விளையாடியுள்ளோம். இதைத் தான் வெளிநாட்டில் இயற்பியல் பாடமாகக் குழந்தைகளுக்குப் புரியவைக்க முயற்சிக்கின்றனர் வெளிநாட்டவர்கள்.

(ii) ஒரு தர்பூசணி பழம் இருந்தால் அதில் இருந்து 6 லட்சம் தர்பூசணி பழங்களை உற்பத்தி செய்துவிடலாம்.

(iii) பொதுவாக தாவரங்கள் நகராது. ஆனால் கிலாமிடோமொனாஸ் என்ற ஒரு செல் தாவரம் நகர்ந்து போகும் தன்மை உடையது.

(iv) பச்சோந்தியின் நாக்கு தன் உடலின் நீளத்தைவிட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும்.

(v) நீல திமிங்கலத்தின் எடை 22 யானைகளின் எடைக்குச் சமம். அதன் இதயம் ஒரு சிறிய கார் அளவில் இருக்கும்.

# மனித நேயம்!!!



நடந்துகொண்டிருக்கிறேன்!
மனிதரில்லாத உலகில்!
மதங்கள் எல்லாம்!
மண்ணாய்ப்போக!
மனித மதம் கொண்ட....!
யானைகள் உருள்கிறது...!
புரள்கிறது...!
தனிமை விரும்பாத...!
உயிர்களுக்கு!
நிழல்களே துணையில்லை!
தொடர்ந்துகொண்டேயிருக்கிறேன்!
மனிதனைக் காண்பதற்காக



**J.R. ரிதன்யா**
II - B.Com



# தமிழ்நாடு "தடை"

# ராமர்கோவில் நேரடி ஒளிபரப்பு

## நிர்மலா சீதாராமன் குற்றச்சாட்டு

K. த்ரிஷா
III - B.Com. (SF II)

**புதுடெல்லி :** புதிய ராமர் கோவிலில் நடைபெறும் வழிபாடுகளை நேரடியாக ஒளிபரப்ப தடைவிதித்துள்ளதாக வெளியான செய்திகள் குறித்து மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தமிழகை அரசைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

மாநிலத்தில் ராமருக்கு அர்ப்பணிக்கப்பட்ட 200க்கும் மேற்பட்டோர் இருப்பதாக அறிவித்த திருமதி சீதாராமன், தனியாருக்குச் சொந்தமான கோவில்களில் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதிலிருந்து காவல்துறை தடுத்து வருவதாகக் கூறினார்.

மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மு.க.ஸ்டாலின் ஆட்சியின்கீழ், மனிதவள மற்றும் CE துறை "1270 கோவில்களுக்கு கும்பாபிஷேகம்" நடத்தியுள்ளதாகவும், 764 கோவில்களில் தினமும் இலவச உணவு வழங்கப்படுவதாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது. இது 197 பழமையான கோயில்களை மீட்டெடுத்துள்ளது, அவற்றில் பல ஆயிரம் ஆண்டுகள் பழமையான கோயில்களை மீட்டெடுத்துள்ளது. கிட்டதட்ட 300கோடி செலவில் தமிழகத்தில் உள்ள இந்த மத நம்பிக்கையாளர்களுக்கு இது தெரியும், எதிர்கட்சிகள் கூட மறுக்க முடியாது.

"மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் பிறர் போன்ற பதவியில் இருப்பவர்கள் இந்தத் தவறான தகவலை வேண்டுமென்றே பிரச்சாரம் செய்வது துரதிர்ஷ்டவசமானது" என்று பி.கே. சேகர் பாபு X வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இன்று (21.01.24) தமிழகம் வந்துள்ள பிரதமர் நரேந்திரமோடி நாளை அயோத்தியில் ராமர்கோவில் கும்பாபிஷேகத்தில் பங்கேற்க உள்ளார். இந்த மெகா நிகழ்வில் அரசியல்வாதிகள் மற்றும் பிரபலங்கள் உட்பட 600க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு கோவில்களில் பிரதமர் மோடி வழிபாடு நடத்தினார்.



# Bottle Art

1. நன்கு உருளையான கண்ணாடிக் குவளையை எடுக்கவும்.
2. அதை நன்கு சுத்தம் செய்து வெள்ளை நிறத்தைப் பூச வேண்டும்.
3. அது காய்ந்த பின் அதில் ஒரு பகுதியில் மஞ்சள் நிறத்தை வட்டமாகப் பூச வேண்டும்.
4. மஞ்சள் வட்டத்தின் வெளிபுறமாக ஆரஞ்சு நிறத்தைப் பூச வேண்டும்.
5. ஆரஞ்சு நிறத்தில் வெளிப்புறமாக பிங்க் நிறத்தைப் பூச வேண்டும்.
6. வண்ணம் தீட்டிய பிறகு சிறிது நேரம் ஊற வைத்தல் வேண்டும்.
7. கருப்பு நிறத்தை எடுத்து மஞ்சள் வட்டத்தின் மேல் வரைய வேண்டும்.
8. அதில் நீங்கள் உங்களுக்குப் பிடித்த படத்தை வரையலாம்.
9. படம் வரைவதற்கு மெல்லிய பிரஸ்சை எடுத்துக்கொள்ளவும்.
10. படம் வரைந்த பிறகு நன்கு உலர வைத்தல் வேண்டும்.
11. நன்கு காய்ந்த பின்பு தங்கநிறத்தில் உள்ள முத்துகளை எடுத்துக் குவளையின் அடிப்பகுதியிலும் மேற்பகுதியிலும் வரிசையாக ஒட்ட வேண்டும்.
12. அதனைக் காய வைத்து எடுத்தால் அழகிய கண்ணாடிக் குவளை தயார்.

## தேவையான பொருள்கள்

- உருளையான கண்ணாடிக் குவளை
- வெள்ளை, மஞ்சள், ஆரஞ்சு, பிங், கருப்பு நிறங்கள்
- மெல்லிய மற்றும் தடிமனான 2 பிரஸ்
- தங்க நிறம் கொண்ட முத்துகள்
- பசை

**மு. ரூபா**
II - B.Sc. Computer Science





# நட்புக்கரம்

நான் அடிச்சறுக்கி விழுந்த போது
அனைவரும் சிரித்தனர் ஆனால்
ஒரு கரம் எழுப்பி என்மேல்
இருந்த மண்கறையை துடைத்தது
அது எந்தக் கரம் என்று
திரும்பிப் பார்த்தபோது காணவில்லை
பின் ஒரு நாள் அதே கரம்
நான் பள்ளியை விட்டுச்
செல்லும்போது கையசைத்தது
அப்பொழுதுதான் பார்த்தேன்
அந்தக்கரம் வேறெதுவும் இல்லை
என் தோழியின் நட்புக்கரம்

**மு. ரூபா**
II - B.Sc. Computer Science

# சிறந்த தொழிலாளி

ஆப்ரகாம்லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவரைப் பிடிக்காத ஒருவன் அவரை அவமானப்படுத்த எண்ணி தன் கால்களில் அணிந்திருந்த செருப்பைத் தூக்கிக் காட்டி, "நீர் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகன் என்பதை மறந்துவிடக்கூடாது. இதோ பாரும்... இது உன் தந்தை தைத்த செருப்புத்தான் நான் பயன்படுத்தி வருகிறேன்!" என்றார்.

அவனை அமைதி தவழப் பார்த்த ஆப்ரகாம்லிங்கன், "நான் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகன் என்பதை நான் ஒரு நாளும் மறந்ததில்லை. உமது செருப்பு இவ்வளவு காலம் உழைப்பதிலிருந்தே தெரிகிறது, எனது தந்தை எவ்வளவு சிறந்த தொழிலாளி என்று. ஒருவேளை இந்தச் செருப்புப் பழுதடைந்தால் என்னிடம் கொண்டு வாரும். எனக்குச் செருப்பு தைக்கவும் தெரியும். நாட்டை ஆளவும் தெரியும்!" என்றார்.



**ஜெசிகா. சா**
II - B.Sc. Zoology

# தொழில்முனைவோர் பண்புகள்



**பி. ஷிமர்னா**
மூன்றாம் ஆண்டு ஆங்கில இலக்கியம்

ஒரு தொழிலைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்குத் தொழில்முனைவோர் அடிப்படையாகப் பெற்றிருக்க வேண்டிய முக்கியமான குணாதிசயங்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

தொழில்முனைவோர் பெற்றிருக்க வேண்டிய சீரிய பண்புகள்

### 1. தன்னம்பிக்கை

தன் மீதும் தனது திறமை மீதும் பூரண நம்பிக்கை வைத்தல். ஒரு காரியத்தையோ, சவாலையோ வெற்றிகரமாக முடிக்க, சந்திக்க தன்னால் முடியும் என்ற நம்பிக்கை வைத்தல்.

### 2. புதிய சிந்தனை மற்றும் சுய செயல்பாடு

காரியத்தை முடிக்க சாதாரணமாகத் தேவைப்படுவதைவிட கூடுதல் முயற்சி எடுத்தல் மற்றும் பிறராலோ அல்லது சூழ்நிலையாலோ உந்தப்படுவதற்கு முன்பே காரியத்தில் புதிய சிந்தனை மற்றும் சுய செயல்பாடுடன் இறங்குதல்.

### 3. தகவல் சேகரித்தல்

இலக்கை அடைய தேவையான தகவல்களைச் சுயமாகச் சேகரிக்க முற்படுவது. சுயமாக சந்தை ஆய்வு செய்தோ, வல்லுநர்களைக் கலந்தாலோசித்தோ, தெரிந்தவர்கள் மூலமாகவோ தொழிலுக்குப் பயனுள்ள தகவல்களை முயன்று சேகரித்தல்.

### 4. வாய்ப்புகளை உருவாக்குதல் – பயன்படுத்துதல்

வாய்ப்புகளுக்காகச் சூழ்நிலையைக் கவனித்தல், கண்டறிதல் மற்றும் உடனடியாக அதைப் பயன்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

### 5. விதிமுறை திட்டமிடல்

இலக்கை அடைய சரியான படிப்படியான திட்டமிடல், தடைகளை முன்னறிந்து திட்டமிடல் மற்றும் புதிய செயல்கள் மூலம் தடைகளை உடைத்தல்.

### 6. விடாமுயற்சி

தடைகளைத் தாண்டி இலக்கை அடைய திரும்பத் திரும்ப செயல்படுதல், புதிய செயல்கள் மூலம் தடைகளை உடைத்தல்.

### 7. பிறரைத் தன்வயப்படுத்துதல்

பிறரை தனது பொருளையோ, சேவையையோ வாங்க வைத்தல், நிதி உதவியோ அல்லது வேறு வகையான உதவியையோ தர சம்மதிக்க வைத்தல்.

### 8. செயல்திறன்

வேகமாகவோ, குறைந்த செலவிலோ ஒரு செயலை முடிக்க வழிவகைகள் கண்டறிதல், செலவு குறித்துப் பூரண விழிப்புணர்வு கொள்ளல்.

### 9. கண்காணித்தல்

பிரச்சனைகளையும், கருத்து வேறுபாடுகளையும் தைரியமாக நேரடியாக எடுத்து வைத்தல், தானே திட்டத்தின் அனைத்துச் செயல்பாடுகளையும் கண்காணித்தல்.

### 10. ஊழியர் நலனில் அக்கறை

தொழிலாளர்கள் வாழ்வை மேம்படுத்த உதவிகள் செய்தல், அவர்கள் நலனில் அக்கறை கொள்ளுதல்.

பெண்கள் முன்னேற்றம் அடையும் பல துறைகளில், இன்று ‘தொழில்முனைவோர்’ என்ற துறையும் விதிவிலக்கல்ல. சாதிக்கப் போராடும் மனங்களுக்கு என்னுடைய வாழ்த்துகள்!



# என்னோடு எனக்காக ஒரு பேச்சு

மனதோடு பேசுகிறேன்
மாற்றத்தை ஏற்றுக்கொள்ள
நிழலோடு பேசுகிறேன்
நிஜமானதைத் தேர்ந்தெடுக்க
கண்ணோடு பேசுகிறேன்
கரைசேர வழிபார்க்க
காதோடு பேசுகிறேன்
காயங்களை மறந்துவிட
உதட்டோடு பேசுகிறேன்
உண்மையாய் இருக்க
இதயத்தோடு பேசுகிறேன்
இறுதிவரை உறதியாயிருக்க
இன்னலை மறந்து
இறுதியில் வெற்றியை ருசிக்க



**Deva Dharshini T**
இளங்கலை இயற்பியல்
மூன்றாமாண்டு






**A. Asmath Nisha**
I - B.Com (SF)



# அம்மா

வார்த்தைகளே இல்லாத வடிவம்...
அளவுகோலே இல்லாத அன்பு... சுயநலமே
இல்லாத இதயம்... அவள்தான் அம்மா!

என் முகம் பார்க்கும் முன்னே!
என் குரல் கேட்கும் முன்னே!
என் குணம் அறியும் முன்னே!
என்னை நேசித்த ஓர் இதயம்!
என் அம்மா மட்டுமே!

# என் வீட்டுச் செல்ல பிள்ளை (நாய்)... TOM

நன்றியுள்ள நண்பன் இவன்
ஐந்தறிவு கொண்டு
ஆறாம் அறிவை எட்டியவன்
பகைவர்க்கு நல்ல சாட்டையிவன்
அன்பர்க்கு உற்றத் தோழன் இவன்
தனிமையிலே காவல் இவன்
உப்பிட்டவரை உள் வைத்து
பூஜிப்பவன் இவன்
உபசரித்துத் தமிழர் பண்பாடு எனில்
வந்தோரை வரவேற்று நாவால்
உபசரிப்பவன் இவன்





K. சிவபிரியா
II B.Com. SF-1



# தூண்டலும் தீண்டலுமாய் நாம்

ஆம் தூண்டுதல் நான் தீண்டுதல் நீ
என் வெள்ளைக் காகிதத்தில் தீண்டிய உன்
முத்தங்களின் எச்சில் படித்தது தான் என்
தூண்டுதல்.
உன்னை உள்ளும் போதெல்லாம் உதிரம்
சொட்டுகிறாய்
காகிதம் சுமக்கிறது
என் எண்ணங்களுக்கும்
எழுத்துகளுக்கும் உன் பேனா
நுனியே அடைவதற்குள்ளேயே ஆயுள்
முடிகிறது
உன் பேனா முள்ளால் கிழிந்தவரும் உண்டு
வீழ்ந்து எழுந்தவரும் உண்டு.
எழுத்துக்களை தின்று
தின்று கொழுப்பில்லாமல் மெலிந்தே
இருக்கிறாய்
தூண்டிய நான் தூங்கும்போது தீண்டிய
வார்த்தைகளைத்
திருட தெரியாதவன் நீ.
உண்மை சொல்ல உன் மை வேண்டும்,
தூண்டிய வார்த்தைக்கு உயிரூட்ட உன்
உயிர்
நோவதை மறந்து ஒற்றைக் காலில்
தீண்டுகிறாய்
உனக்காக ஒற்றை வரியாவது தூண்ட
வேண்டாமா?
தூண்டுகிறேன் அதையும் நீயே தீண்டிவிடு...

**அ. சமீரா**
III - B.A. English (SF)



# நிறம் மாறினால் பட்டாம்பூச்சி பறக்காதோ?



**தன்யா ம.ர.**
இளங்கலை கணிதம்
2–ஆம் ஆண்டு

நிழலோடு மறைத்துக் கொள்ள
கருஞ்சிலைகளா உனக்கு?
எதையும் மறைக்க அல்ல,
என்னை மதிக்க வைக்க
கூந்தலைக் காட்டினால்
உலகம் எறிந்துவிடுமோ உனக்கு?
கூந்தல் என் பெண்மைக்கு அழகு
உலகம் பார்க்க அது எதற்கு?
விடுதலை வேண்டாமா உனக்கு?
எது விடுதலை
ஆடைகளை அரித்துக்கொள்வதா?
பாதைகளை உயர்த்திகொள்வதா?
எதனை நோக்கி உன் வாழ்கையைச்
சுருக்கிகொண்டாய்?
விடிந்தவுடன் முடியும்
நாளுக்காக அல்ல.
இடித்தவுடன் வீழாத
என் கனவுகளுக்காக
போராடி வெல்ல வாழ்க்கை
போர் அல்ல.
சிரித்துக்கொண்டே
கைத்தட்ட படைக்கப்பட்ட
திரைப்படம்...
முடியும்போது யார்
நீ எனக் கேட்கும் உலகிற்கு
எதற்கு இத்தனை கேள்விகள்?
சுதந்திரம் போராடுபவர்கள்
கையில் அல்ல
தேவைப்படுபவர்கள் கண்களில்
எனக்கு எதற்கு?
“சுதந்திரம்” என நீ கூறும் “சுதந்திரம்”.

# தன்னம்பிக்கை

முடியாதென்று முகம் சோர்ந்து
முன் வைத்த காலை
பின் வைக்க எண்ணுகிறாயா?
தோள் கொடுத்த நண்பனும் – நீ
தோல்வியை முத்தமிட்டால்
தூரம் சென்றுவிடுவான்
வெற்றிக்கனியை சுவைக்கும்
வேளையிலே
எதிர்த்து வாதிட்ட வாயெல்லாம்
எள்ளி நகையாடிய பற்களெல்லாம்
இன்முகத்தோடே எதிர்வரும்
வாழ்ந்தாலும் ஏசும் – நீ
தாழ்ந்தாலும் ஏசும் இந்த உலகத்திலே
நீயும் நானும் ஒரு மானுடப் பிறவி.
முடியாது என்ற சொல்லை முறியடித்து
முடியும் என்று முன்செல் – உன்
முற்காலத்தைப் பற்றி சிந்திக்காதே
இன்று மட்டுமே நிஜம்...
பிற்காலம் உன் கையில்.

இப்படிக்கு உங்களில் ஒருவள்
ஹி. ஆன்ஷலா
இளங்கலை இரண்டாமாண்டு ஆங்கிலம்



M. Brindha
III B.Sc Maths (S.F)

# அழகின் பதுமை அவளோ!

முல்லையைச் சூடிக்கொள்ளும்
கோதையவளின்
கூந்தல்அது கருமைநிற நீர்வீழ்ச்சியோ!
வெட்கம் கொஞ்சும் பாவை அவளது
முக அழகும் பாரிஜாதமும் ஒன்றல்லோ
காந்தையவளின் தேக அழகு சொல்லிடவே
வானவில்லின் பேரழகு போதுமல்லோ
உறைந்துபோன ஓர் பனிரோஜாவின்
அழகைப் பூட்டியதோ அவள் உதடுகள்
ஆழ்கடலில் தேடியும் பெற இயலா
கருப்புநிலா அவள் தன் விழியல்லோ
அழகென்னும் பதுமையில் பெண்ணே!
உன்னைப் பூட்டியது யாரோ?

# அன்னையின் கரங்கள்



என் அம்மா எனக்கு
ஒரு கவிதையானாள்
நான் தவழ அவள்
கரங்கள் கைகொடுக்க
நான் அழ
அவள் கை அணைக்க
நான் புன் முறுவல் செய்ய
அவள் மகிழ
என் பசியை
அவள் பசியாக்கி
அவள் கரங்களால்
என் பசியாற
என் நோயில் அம்மாவின்
அன்புக் கரங்கள்
போர்வையாகி முத்தமிட
தாயானாள் அவள் ஒரு தாயானாள்
நான் உயர என் அம்மா
இறைவனை வேண்டி
தாயானாள் ஒரு கவிதையானாள்
சுற்றமும் நட்பும் போதித்து
உறவுகள் கைக்கோர்த்து
பக்குவமாய்ப் பழக
கற்றுக்கொடுத்தவள் என் அம்மா
வீடு வீதி சுற்ற விடாமல்
விரும்பிய படி நடக்கவிடாமல்
நற்போதனைகள் தந்தவள்
அம்மா! என் அம்மா
பாரினில் சிறந்திட
பார்போற்றும் படி வாழ
பாருக்கு ஓர் கருவியாய்
அமைய வழி வகுத்தவள் அம்மா
தாயில் சிறந்ததொரு
கோயிலும் இல்லை
என்ற ஆன்றோர் வாக்கு
இனிதாய் அமைகிறது

சா. இ. ரெக்சலின் சார்லஸ்
III- BSc Mathematics (SF)



# ஜல்லிக்கட்டு

ச. வினிதா
III - B.A English (SF)

## குறிப்புச் சட்டகம்

1. முன்னுரை
2. வரலாறு
3. பெயர்க்காரணம்
4. விஞ்ஞானிகளின் வியப்பு
5. ஜல்லிக்கட்டின் சிறப்புகள்
6. முடிவுரை

## முன்னுரை

தமிழர்கள் வீர விளையாட்டுகளின் மூலம் தங்களது வீரத்தினை வெளிப்படுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அந்த வகையில் தமிழர்களின் வீர விளையாட்டுக்களில் ஒன்றாக ஜல்லிக்கட்டு.

ஜல்லிக்கட்டானது ஏறுதழுவுதல் என்றும அழைக்கப்படுகின்றது. தமிழகத்தின் பல இடங்களிலும் இவ்விளையாட்டு வெகுவிமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கமாகும். இளம் காளையர்கள் நிஜக்காளைகளை அடக்கி தங்களது வீரத்தை வெளிப்படுத்துவர். ஜல்லிக்கட்டின் வரலாறு அதன் சிறப்பம்சங்கள் போன்ற பலவற்றையும் இக்கட்டுரையில் காண்போம்.

## வரலாறு

ஜல்லிக்கட்டுப் பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிந்துவெளி நாகரீகத்திலும் நிகழ்ந்ததாகச் சான்றுகள் உள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களில் ஏறுதழுவுதல் என்ற சொல் காளையை அடக்கும் வீர விளையாட்டின் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கொல்லக்கூடிய காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் கொல்வேறு தழுவல் என்று சிறப்பித்துக் கூறப்படுவதையும் காணலாம். கிபி 2000 ஆண்டு அளவிலேயே ஏறுதழுவுதல் வழக்கத்தில் இருந்தது என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதற்கு ஆதாரமாக புதுடெல்லியில் உள்ள தேசிய கண்காட்சியில் சிந்துவெளி நாகரீகம் சார்ந்த முத்திரை ஒன்றில் ஒரு காளை உருவமும் அதை அடக்க முயலும் வீரரை அக்காளை தூக்கி எறிவதும் உயிரோட்டமான விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

## பெயர் காரணம்

ஜல்லிக்கட்டு என்பது தற்காலத்தில் வந்த பெயர் ஆகும். அந்தவகையில் சல்லி என்பது விழாவின்போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தைக் குறிக்கின்றது. புளியங் கம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணியும் வழக்கம் இப்போதும் வழக்கத்தில் உள்ளது.

மேலும் 50 ஆண்டுகளுக்கு முன்னர் சல்லிக்காசு என்னும் இந்திய நாணயங்களை துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டி

விடப்படும் வழக்கம் இருந்தது. இதனால்தான் பிற்காலத்தில் சல்லிக்கட்டு என்று மாறியது. பின்னர் அதுவே பேச்சுவழக்கில் திரிந்து ஜல்லிக்கட்டு என்று அழைக்கப்பட்டது.



### ஜல்லிக்கட்டின் சிறப்புகள்

ஜல்லிக்கட்டில் ஆயர் மட்டுமின்றி இன்று பலரும் பங்கேற்கின்றனர். ஜல்லிக்கட்டில் வென்றவர் பணத்தைப் பரிசாகப் பெறுவதுண்டு.

தமிழர்களின் சிறப்புப் பண்டிகைகளில் ஒன்றான தைத் திருநாளின் மறுநாளான மாட்டுப்பொங்கல் அன்று ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டுப் பெரும் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

விளையாட்டானது கிராமிய தேவதைகளின் வழிபாட்டு நம்பிக்கையுடன் தொடர்புடையதாகத் திகழ்கின்றமை சிறப்புக்குரியதாகும்.

மேலும் அம்மை, வைசூரி போன்ற கொடிய நோய்கள் பரவிய காலத்திலும் மழையில்லா வறட்சிக் காலங்களிலும் மற்றும் பிள்ளை வரம் கேட்கும் நிலையிலும் இக்குறைகள் நீக்கப்பட்டால் பொங்கல் நாளன்று சல்லிக்கட்டுகின்றோம் என வேண்டுதல்கள் செய்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### முடிவுரை

தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றான ஜல்லிக்கட்டுத் தற்காலத்தில் பல சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றது.

தமிழரின் அன்பின் அடையாளம் விருந்தோம்பல் என்றால் தமிழர் வீரத்தின் அடையாளம் ஜல்லிக்கட்டு ஆகும். பாரம்பரியத்தைப் பேணிக்காப்போம் வீரத்தைப் பறைசாற்றுவோம்.

*******************




## தவிப்பு

எண்ணற்ற தகவல்
தொடர்பு
சாதனங்களின் வரவால்
தகவல் சொல்ல
வாய்ப்பு வராமல்
தனித்துத் தவிக்கிறது
'தபால்பெட்டி'


மாலதி சா.
II - B.Sc. Zoology




## வலி

காலத்தின் போக்கில்
கடந்துவிடலாம் என
கற்பனை செய்து
கம்பீரமாக வாழ்ந்தாலும்
கடந்து செல்ல மறுக்கிறது
துரோகத்தின் வலி...


மாலதி சா.
II - B.Sc. Zoology

# வாழ்க்கைப் பாதை

"நீ செல்லும் பாதையில் தவறி விழுந்தால் யாரும் பார்க்குமுன் எழுந்துவிடு அதுவே, நீ உன் வாழ்க்கையிலே தவறி விழுந்தால் அனைவரும் பார்க்கும்படி" எழுந்துவிடு.

ஆம், மிகவும் நிதார்த்தமான, யதார்த்தமான வரிகள். நம் வாழ்க்கைப் பாதை மிகவும் அழகானதே அந்த வாழ்க்கைப் பயணத்தில் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும் அழகானவர்களே இத்தகைய அழகான பாதை சில சமயங்களில் தவறான வழியில் செல்வதுண்டு. எப்படி நாம் வழி தெரியாத இடத்திற்குச் செல்லும்போது வழி மாறுமோ அப்படி. "வழி மாறி வலியோடு, வழி தெரியாமல், விழி நீரோடு நிற்கும்போது, என் பெயரை யாரேனும் விளிக்க மாட்டார்களோ, எனக்குத் துணை நிற்க மாட்டார்களா என்று ஏங்கும் சிறிய ஏக்கம் வாழ்க்கையில் வழி மாறியவருக்கும் உண்டு. ஆனால் அவருக்குத் துணை நிற்க யாருக்கும் நேரமும் இல்லை. முக்கியமாக துணை நிற்கும் மனம் யாருக்கும் இல்லை. அதுதான் உண்மை. துன்பத்திலும் வருத்தத்திலும் இருப்பவர் தம்மிடம் எதிர்பார்ப்பது நம் பணத்தை அல்ல நம் மனத்தை.

இந்த உலகம் அழகானது. அழகு இருந்தால் ஆபத்தும்தானே இருக்கும். நீ விழுந்தால் கைகொட்டி சிரிக்கும் அதுவே நீ எழுந்தால் கை தட்டி ரசிக்கும். இரண்டிற்கும் நூலளவே வேறுபாடு. அது என்னவெனில் உன் முயற்சி. மற்றவர்கள் சிரிப்பதை எண்ணி கவலை கொண்டால், கடைசி வரை கவலை கொண்டிருக்க வேண்டியதுதான். அதுவே மற்றவர்கள் சிரிப்பதை நீ யோசித்தால் அதன் காரணம் உனக்குப் புரியும். நீ அதைச் சரி செய்து கொள்வாய்.

ஆம் நண்பர்களே, நம் வாழ்க்கையும், நாம் செல்லும் பாதையும் ஒன்று. சென்ற வழியையே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தால் செல்லும் பாதையை மறந்துவிடுவாய். செல்லும் பாதையையே நினைத்துக் கொண்டிருந்தால் நடக்கும் அடிகளில் விழுந்து விடுவாய் சரி என்னதான் செய்ய? பாதையை நீயே உருவாக்கு. பாதை கிடைக்கும் பாதையில் பயணி. உனக்கான நிறுத்தம் வரும்; அதுவரை காத்திரு; மீனுக்காகக் காத்திருக்கும் கொக்குப் போல.


**V. மேரி கீர்னா**
II - B.Sc. Computer Science




# நட்பு


**K. Preetha**
II - M.Sc. Zoology


முன்பின் அறிமுகம் இல்லை
முதல்முறை சந்தித்தபோது
பெரிதாக ஒன்றும் தோன்றிடவில்லை
காலங்கள் கடந்தபோது
புரிந்து கொண்டேன் உந்தன் நட்பினை
அன்பில் அன்னையானாய்
பலநேரம் நல்ல ஆசானானாய்
துன்பத்தில் தோள் கொடுத்தாய்
இன்பத்தில் தோளைத் தட்டிக்
கொடுத்தாய்
காலங்கள் பல கடந்தபோதும்
மாறிவிடவில்லை நம் நட்பு
நம் உருவத்தில் மாற்றம் ஏற்பட்டாலும்
நம் உள்ளத்தில் நட்பு ஒருபோதும்
குறையவில்லை
வற்றாத ஊற்றாய்ப் பெருகிக் கொண்டு
இருக்கிறது இன்றளவும் நம் நட்பு
கடல்நீர் கூட வற்றிவிடலாம் ஆனால்
நம் நட்பு ஒருபோதும் குறையாது.

# கல்விச் செல்வம்



**மு. அமர்சினி**
இளங்கலை இரண்டாம் ஆண்டு

## முன்னுரை

*“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு*
*மாடல்ல மற்ற யவை”*

ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் என்பது கல்விச் செல்வமே ஆகும். கல்வியைத் தவிர மற்ற பொருட்செல்வங்கள் எல்லாம் அழியக் கூடியவையாகையால் அவை சிறப்புடைய செல்வம் ஆகா. கல்விச் செல்வமானது வெள்ளத்தால் அழியாது; வெந்தணலால் வேகாது, கள்வரால் கவர முடியாது; வேந்தரால் கொள்ள முடியாது. அத்தகைய கல்விச் செல்வம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.



## இளமையில் கல்

சிறு வயதிலிருந்தே கல்வியைத் தொடங்கிட வேண்டும். இளம் வயதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் கல்வியானது ‘பசுமரத்தாணி போல’ நம் மனதில் ஆழப் பதிந்துவிடும். நம் சமுதாய அமைப்பில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல், வேலைக்கு அனுப்புகின்றனர். இந்த நிலையை மாற்றியமைப்பதற்காகத்தான் பெருந்தலைவர் காமராஜர் பள்ளிகளில் மதிய உணவுத்திட்டத்தைக் கொண்டுவந்தார். ஒருவேளை உணவுகூடக் கிடைக்காத நிலையில் குழந்தைகளிடம் படியென்றால் எப்படிப் படிப்பார்கள் என்று காமராசர் அவர்கள் சிந்தித்தார்கள். மதிய உணவுத் திட்டம் தோன்றியது. வளர்ந்து வருகின்ற பாரத நாட்டின் வருங்கால சந்ததியினர் மிகுந்த கல்யிறிவு பெற்றவர்களாக விளங்க வேண்டும். அதற்கு இளமையிலிருந்தே கற்பதுதான் சிறந்தது.

## கல்வியும் சமுதாயமும்

ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்தை அளவிடும் அளவுகோல்களில் முதன்மையானது கல்வியாகும். எந்த அளவிற்கு ஒரு சமுதாயத்திற்குக் கல்வி கிடைக்கின்றதோ அந்த அளவிற்கு அந்தச் சமுதாயம் முன்னேறுகிறது. சமுதாய முன்னேற்றத்திற்கு அவசியமானது கல்வியாகும். அதனால்தான் தமிழக அரசு அனைத்து மாவட்டங்களிலும் 'அனைவருக்கும் கல்வி' என்ற திட்டத்தினைத் தொடங்கி தீவிரமாக நடைமுறைப்படுத்துகின்றது.

## கல்வியின் முக்கியத்தவம்

*"கற்கை நன்றே கற்கை நன்றே*
*பிச்சை புகினும் கற்கை நன்றே"*

என்று அதிவீரராம பாண்டியர் கல்வியின் முக்கியத்துவத்தைச் சங்க காலத்திலேயே கூறியுள்ளார். பிச்சையெடுத்துப் பொருள் பெற்றாவது கல்வி கற்றிட வேண்டும் என்று அதிவீரராம பாண்டியர் கூறியுள்ளார்.

உடன்பிறந்தார் இருவருள் மூத்தவனை விடுத்துக் கல்வி கற்ற இளையோனைச் சபை வரவேற்கும் என்று புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகிறது. கல்லாதவர், கண் இருந்தாலும் முகத்திலிரண்டு புண்ணுடையார் என்றும், கல்வி கற்காதவர் உயிர் வாழ்ந்தாலும் பயனற்ற களர்நிலம் போன்றவர்கள் என்றும் வள்ளுவர் கூறியுள்ளார். இதிலிருந்து நாம் கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து கொள்ளலாம்.

## முடிவுரை

அரசோ அல்லது பொதுநல அமைப்புகளோ மட்டும் முயற்சி செய்தால் எந்தவொரு திட்டமும் முழு வெற்றியடையாது. அதைப் பயன்படுத்துவோரும் முழு அளவில் பயன்படுத்த வேண்டும். அனைத்துத் தரப்பு மக்களும் கல்வியின் பயன்களை, கல்வியால் இச்சமுதாயம் அடையப்போகும் உயர்வினை அறிந்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம். கல்வியால் அறிவு மிகுந்த, ஆக்கப்பூர்வமான சமுதாயம் மலர வழி வகுப்போம்.



# குழந்தைத் திருமணம்

தாவி நிலவைப் பிடித்தவள்,
தாலி கயிறைப் பிடிக்கிறாள்...
சிட்டாகப் பறந்த அவள்,
பொட்டோடு நிற்கிறாள்...
தட்டாங்கல் விளையாடியவள்,
தட்டோடு நிற்கிறாள்...
பட்டுப் புழுபோல் இருந்தவள்,
பட்டும் படாமலும் சிரிக்கிறாள்...
மொட்டை வெயிலில் விளையாடியவள்
மெட்டியின் ஒலியில் அடங்கினாள்...
தொட்டில் கட்டி ஆடியவள்,
தொட்டில் பாட்டுப் பாடுகிறாள்...
சிறகடித்துத் திரிந்தவள்,
சிறைக்குள் திணறுகிறாள்...
பள்ளிப் பருவம் முடியும் முன்பே,
பாலகன் கையில் ஏந்துகிறாள்...
சந்தனம் பூசிய மேனியதன்,
சாயம் வெளுக்க உழைக்கிறாள்...
பல்லாங்குழி விளையாடிய அவள்,
பாதாளகுழி விளிம்பில் நிற்கிறாள்...
இது என் மொழி அல்ல,
கலங்கி நிற்கும் குழந்தையின் ஒலி.



**என். அனிஷா பர்வின்**
விலங்கியல் முதுகலை
முதலாமாண்டு

# பெண்ணே எழு



**S. Kavitha**
II - B.Com (SF-1)



அனல் கொண்ட உன்விழிகள்
அகிலத்தை ஆளட்டும்
உடல்நோக்கும் கயவர்கள்
உள்வஞ்சம் சாகட்டும்
வெற்றிகள் பலவற்றால்
வேதனைகள் வேகட்டும்
சாதனைப் பெண் உன்னைச்
சரித்திரமும் பேசட்டும்

கிணற்றின் உள்ளே தவளையெனக்
கிடந்தால் வாழ்க்கை இல்லையடி
கிளர்ச்சிப் போரில் கால்பதித்திடு
கீதம் வாழ்வில் இசைக்குமடி

பாலியல் சீண்டல் பலவிதத்தில்
பனிமலர் உன்னை வாட்டிடுதே
வேரோடு நீயும் அதைக்களைந்து
விளைச்சல் செய்திடு நல்உலகை...
பெண்ணாய்ப் பிறந்த நாள்முதலே
பெரும்போர் தானடி
வாழ்க்கையிலே
எதிர்த்துக் கேள்வி நீதொடுத்தால்
ஏசும் பேச்சுக்கள் தொடராதே...

தங்கம் என்றும் புகழ்ந்திடுவார்
தாழ்த்திப் பேசியும் இகழ்ந்திடுவார்
பெண்ணே ஒன்றை
நினைவில்கொள்
பேசும் நாவை எதிர்த்தேநில்
பழியைச் சொல்லும் பாம்புகளைப்
பாங்காய் நீயும் கடந்திடடி
விழிகள் யாவும் வியந்திடவே
வீரம் கொண்டே நடந்திடடி

அச்சம் நாணம் மடமெல்லாம்
அழகே மனதில் விதைக்காதே
வீரம் வெற்றி இவைமட்டும்
வேண்டும் அதை நீ மறக்காதே

காற்றைப்போல வேகம்கொள்
கடமை செய்திடத் தாகம்கொள்
நேற்றை நினைத்துக் கலங்காமல்
நெஞ்சில் துணிவைச்
சேர்த்துக்கொள்
அன்பும் அறிவும் ஆற்றலுமே
அழகடி வண்ணப் பெண்மகளே
அதைநீ வாழ்வில் உணர்ந்தாலே
அகிலம் ஆள்வாய் தூயவளே!



# தோல்வியின் தழுவல்

தோற்றுக் கொண்டே இருக்கிறேன்
தெரியவில்லை...
தோல்விக்கு என்மேல் அவ்வளவு காதல் போலும்
தொட்டணைத்துத் தழுவிக்கொண்டே இருக்கின்றது
தோல்விகள் பாடங்கள் என்கின்றனர் பலர்
தோற்றால் என்ன?
தன்னம்பிக்கைக் கொள் என்கின்றனர் சிலர்
திராணி இல்லை என்பதா
தளர்ந்தே போய்விட்டேன் என்பதா
தெரியவில்லை...
எனக்கு மட்டும் வெற்றிக்கனி என்பது
எட்டாக் கனியாகத்தான் இருக்கும் போலும்
எனக் கூறியே கடந்து செல்கிறேன்
என் வாழ்க்கைப் பயணம் முழுவதும்

**Metha Japhro. M**
III - B.Sc. Maths (aided)



# நட்பு கவிதை



நட்பு இலைகள் அல்ல
உதிர்வதற்கு
அது இறைவனின்
அன்பழிப்பு...
தட்டிக்கொடுக்கும்
நண்பன் இருந்தால்
வேதனைகள் கூட
சாதனைகள் ஆகும்...
நட்பு என்ற வார்த்தை
இந்த உலகல் உலவும்
வரை இங்கே யாரும் அனாதை இல்லை...

**H. Vana Ajina**
III - B.Com (SF-II)



# அன்பு

ஒருவரின் அன்பு
உங்களை
பெருமைப்படுத்தினால்
அதன் கரம் பற்றி
முன்னேறுங்கள்...!
சிறுமைப்படுத்தினால்
அதனைக் கை கழுவி
விட்டு முன்னேறுங்கள்...!!!

**அ. ஜெய அபிஷா**
II. B.Com S.F.1



# தன்னுடைய தன்னம்பிக்கை

வாழும் வாழ்க்கைக் கூட அழகுதான். அதை ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு. வெற்றி கூட நிரந்தரம் அல்ல எனும்போது தோல்வியும் அப்படித்தான் எதுவும் நிரந்தரமில்லை. ஓவியத்திற்கு அழகு சேர்ப்பது பல வண்ணங்கள், அதுபோலத்தான் நம் மனத்திற்கு அழகு சேர்ப்பது நல்லெண்ணங்கள். எப்போதும் நல்ல எண்ணங்களையே எண்ணுங்கள். நல்ல எண்ணங்கள் மிகவும் வலிமையானவை. அவை உங்களுக்கு நல்லதையே கொண்டு வந்து சேர்க்கும். வாழ்வில் சறுக்கல்கள் இருக்கும்போது உடைந்து போகக் கூடாது. தோல்விகளைச் சந்திக்காமல் உயர்ந்தவர்கள் எவருமில்லை. இந்தப் பதிவில் வாழ்க்கைக்குத் தன்னம்பிக்கை கொடுக்கும் கவிதை வரிகளை இங்கு நீங்கள் காணலாம்.

தன்னம்பிக்கைப் பெண்
**அகல்யா. சு,** II. B.Com S.F.1




# அன்பு

வெளிப்படுத்தத் தெரியாத
அன்பு கூட
பேரன்பு தானே.

அருகில் இருப்பதால்
அன்பு அதிகரிப்பதும் இல்லை
தொலைவில் இருப்பதால்
அன்பு குறைவதுமில்லை.

அடங்கிப்போவதும்
அடிபணிவதும்
உன் அன்பிற்கு
மட்டுமே

உரிமையோடு
சண்டைபோட்டு
கோபப்படுறவங்க
மனசுலதான் ஆழமான
அன்பு அழியாமல்
இருக்கும்

கொடுப்பதிலும்
பெறுவதிலும்
கஞ்சத்தனம் வேண்டாமே
(அன்பு)

மு. சுஜிதா
II B.Sc. Computer Science



# விடுகதைகள்

1. கையும் இல்லை, காலும் இல்லை, ஓடிக்கொண்டே இருப்பேன் நான் யார்?
   விடை : **நிழல்**
2. எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன?
   விடை : **விக்கல்**
3. உயிர் இல்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு அது என்ன?
   விடை : **பாய்**
4. தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?
   விடை : **பென்சில்**
5. மூன்றெழுத்துப் பெயர், உடல் முழுவதும் வெள்ளை நிறம் அது என்ன?
   விடை : **பஞ்சு**
6. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?
   விடை : **தேள்**
7. எத்தனை தடவை சுற்றினாலும் தலை சுற்றாது அது என்ன?
   விடை : **மின் விசிறி**
8. கரைந்து போகுது வெள்ளிப் பட்டு?
   விடை : **தேய்பிறை**

ச. சிவலெட்சுமி சந்தியா
II ஆம் ஆண்டு கணினி அறிவியல்



Aksaya
II B.Com (SF-2)





# நட்பு

சொந்தங்கள் என்பது
பனித்துளி போன்றது
சிறு பொழுதில் மறைந்து விடும்
நட்பு என்பது
பரந்த வானம் போன்றது
உன்னைச் சுற்றி எப்போதும்
நிலைத்து நிற்கும்

வலிகள் கூட
நொடிப்பொழுதில்
மறைந்து விடும்
உன்னைச் சுற்றி நல்ல
நண்பர்கள் இருப்பார்கள்
என்றால்

ஆயிரம் விண்மீன்கள்
ஆகாயத்தில் பிரகாசித்தாலும்
இரவுக்கு அழகு நிலவுதான்
அதே போலத்தான் ஆயிரம்
உறவுகள் மண்ணில் இருந்தாலும்
வாழ்க்கைக்கு அழகு
உண்மையான நட்பு தான்

**சூ. ஆனி ஜெசிந்தோ**
II ஆம் ஆண்டு கணினி அறிவியல்



# தனி ஒருத்தி

உன் அருகில் நான் இல்லாமல்
இருக்கலாம். ஆனால் உனக்காக
உன் நினைவுகளுடன் தனிமையில்
காத்திருக்கும் நாட்கள் கூட சுகம்தான்
மிகப்பெரிய வலி நான் உன்னுடன்
பேச நினைத்தும் பேச
முடியாமல் இருப்பதே.
பல நாட்களுக்குப் பிறகு ஒருவரை
நீ பார்க்கும்போது உன்னை
அறியாமல் கண்ணீர் வந்தால்
உன் மனதில் அவர் இடத்தை நிரப்ப
யாராலும் முடியாது என்பதை
புரிந்து கொள்
கிடைக்காது என்று தெரிந்தும்
மனம் உன்னைப் பார்த்தவுடன்
கிடைத்துவிடாதா என்று ஏங்குகிறது
இந்தப் பெண்ணின்
மானங்கெட்ட மனம்...

**ஜெ. ஜெனிஷா**
II ஆம் ஆண்டு கணினி அறிவியல்

# கடி ஜோக்

1. கீழே விழுந்தாலும் காயம் படாமல் இருப்பது எது? விடை : மழை
2. பொருள் வைக்க யூஸ் பண்ண முடியாத பை எது? விடை : தொப்பை
3. முள் குத்தினா ஏன் இரத்தம் வருது? விடை : யார் குத்தினானு பார்க்க வருது
4. சாப்பிட முடியாத கனி எது? விடை : பால்கனி
5. இந்த டாக்டர் நடந்தேதான் ஹாஸ்பிட்டல் போவாரு ஏன்? விடை : அவரு கால்நடை மருத்துவர்
6. ஆப்பிளை நறுக்கி வைத்தால் என்ன ஆகும்? விடை : நரி சாப்பிடும்
7. தாஜ்மகாலுக்கு பெயிண்ட் அடிச்சா என்ன ஆகும்? விடை : செலவாகும்
8. நாம் எந்த எழுத்தை எழுத முடியாது? விடை : நம் தலையெழுத்தை
9. அண்ணனுக்கும் தம்பிக்கும் என்ன வித்தியாசம்? விடை : வயசு வித்தியாசம்
10. கோழி ஏன் முட்டை போடுது? விடை : ஏன்னா அதுக்கு ஒன்னு, ரெண்டு போடத் தெரியாது



**ஜெ. ஜெனி பிரிகிதா**
II ஆம் ஆண்டு கணினி அறிவியல்



# மனம் என்னும் மாயை

உன் கைக்கோர்த்து நடந்து செல்ல
எண்ணிய நாட்கள்
நிமிடங்கள் ஆகாதா
என்று மனம் கேட்டபோது
மூளை கூறியது முட்டாளே
அவை நாட்கள் இல்லை
வருடங்கள் என்று!!



# தலையணை

*கோபத்தில் இருக்கும்போது வீசி*
*எறிந்தேன் உன்னை...*
*சோகத்தில் இருக்கும்போது கட்டி*
*அணைத்தேன் உன்னை...*
*என் கதைகளை அறிந்த ஒரே*
*நண்பனும் நீயே...*
*என் அழுகைத் துடைத்த ஒரே*
*நண்பனும் நீயே...*
*உன்னை விட்டால் வேறு*
*நண்பர்கள் இல்லை*
*என் கதைகளைச் சலிப்பில்லாமல்*
*கேட்பதற்கு...*


**அ. ஆன்றியா**
II ஆம் ஆண்டு கணினி அறிவியல்




# விடுகதைகள்

1. முயல் புகாத காடு யாது?
   **முக்காடு**
2. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம் நான் யார்?
   **அஞ்சல் பெட்டி**
3. மூன்று பெண்களுக்கு ஒரே முகம். முதல் பெண் ஆற்றிலே, நடுப்பெண் காட்டிலே, கடைசி பெண் வீட்டிலே அவர்கள் யார்?
   **முதலை, உடும்பு, பல்லி**
4. வாள் இல்லாமல் கேடயம் மட்டும் எப்போதும் வைத்திருக்கும் போருக்குப் போகாத வீரன் அவன் யார்?
   **ஆமை**
5. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் அது என்ன?
   **தராசு**
6. காலைக்கடிக்கும் செருப்பல்ல, காவல் காக்கும் நாயல்ல அது என்ன?
   **முள்**
7. அமைதியான பையன் ஆனால் அடிக்காமலேயே அழுவான் அவன் யார்? **ஐஸ் கட்டி**
8. ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான், ஒருவன் நடப்பான் அவன் யார்? **கடிகாரம்**
9. நிலத்தில் முளைக்காத செடி, நிமிர்ந்து நிற்காத செடி அது என்ன?
   தலை முடி


**அ. ஜெசிக்கா**
II-ஆம் ஆண்டு கணினி அறிவியல்



# பொங்கல் கரும்பின் மருத்துவக் குணங்கள்

பொங்கல் என்றாலே நினைவுக்கு வருவது ஆறடியில் வளர்ந்து நிற்கும் கரும்புதான். பொங்கல் திருநாளில் வீட்டில் கரும்பு வாங்கி கதிரவனுக்குப் படைப்பது வழக்கம். சர்க்கரை மற்றும் வெல்லம் தயாரிக்கப்படும் கரும்பில் பல மருத்துவக் குணங்கள் அடங்கியுள்ளன.

- கரும்பு உடலுக்குக் குளிர்ச்சியூட்டும். மலமிளக்கியாகவும் செயல்படும். சிறுநீர் பெருக்கியாகவும், பித்தத்தை நீக்குவதாகவும் உள்ளது.
- கரும்பு சிறுநீர்கடுப்பைக் குணப்படுத்தும்.
- குடல்புண், மூலம், வெட்டைச் சூடு இவைகளைக் குணப்படுத்தும்.
- புண்களை ஆற்றும். கிருமிநாசினியாகவும் பயன்படுகிறது.
- கரும்புச் சாற்றுடன், இஞ்சிச்சாறு கலந்து அருந்த உடல் வலி குணமாகும்.
- ஒரு கப் கரும்புச் சாறுடன் சிறிதளது வெல்லம், ஒரு டீ ஸ்பூன் நெய் சேர்த்துச் சாப்பிட உடல் குளிர்ச்சி பெறும்.
- கரும்புச் சாறுடன் வெல்லம் மற்றும் மஞ்சள் சேர்த்துக் குழைத்துத் தீப்புண்கள் மேல் தடவ புண் ஆறும்.
- கரும்புச் சாறுடன், இஞ்சிச்சாறு, எலுமிச்சைச் சாறு கலந்து அருந்திவர பித்தம் குறையும். உள் சூடு, குடல்புண், மூலம் போன்றவை குணமாகும்.
- கரும்புச் சாறுடன் சிறிதளவு தேன், எலுமிச்சை சாறு கலந்து அருந்த மலச்சிக்கல் தீரும்.
- கரும்பு கற்கண்டு தாதுவலிமையைக் கூட்டும்.
- தணலில் கரும்பு சர்க்கரையோடு சாம்பிராணிப் பொடி சேர்த்துப் புகைக்க கிருமிகள் அழியும், கரப்பான், கொசுத்தொலை மறையும்.
- நீரில் கரும்பு வேரை இட்டுக் காய்த்து அரை கப் வீதம் இருமுறை குடிக்க சிறுநீர்க்கடுப்பு தீரும்.
- தினசரி கரும்புச்சாறு பருகக்கூடாது. அப்படித் தொடர்ந்து பருகினால் சளி, குடல்புண், ஜலதோஷம், நீரிழிவு ஏற்படும்.
- கரும்புச்சாறு பற்கள் மற்றும் எலும்புகளை உறுதிப்படுத்துகிறது.
- கரும்பு பல் சொத்தையாவதைத் தடுக்கிறது.
- கரும்பு தோல் சம்பந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்துகிறது.
- கரும்பு புற்றுநோய் பாதிப்பிலிருந்து உடலைப் பாதுகாக்கிறது.
- கரும்பில் அதிக அளவில் பொட்டாசியம் மற்றும் குறைந்த அளவில் சோடியம சத்துகள் நிறைந்துள்ளன. இது சிறுநீரகத்தின் ஆரோக்கியத்தினை மேம்படுத்தும்.
- கரும்பில் அதிக அளவு நார்ச்சத்து நிறைந்துள்ளது. இது உடல் எடையைக் குறைக்க பயன்படுகிறது.

A. மிஷா
தாவரவியல் முதுகலை முதலாம் ஆண்டு



# தென்னை மரம்

கடந்து செல்கையில்
மெதுவாய்
அழகாய்
வெட்கமாய்
காற்றில்
அவள் தலையசைத்து
போய்வாங்கனு சொல்ல
கூந்தல் யாவும்
பூங்காற்றில் பூவாய் பறக்க...
பரிசம் போட்ட
பச்சை குண்டுமல்லி
கூந்தலடியில் வரிசைகட்டி
எட்டிப் பார்க்கும்
அதைக் கெட்டியாய்
தாளம்பூ வாசம் ஒட்டி வர
ஊர்ந்து செல்லக் கூட யூகம்
அளிக்காத வளர்ந்த கட்டழகி
என்னைப் புலம் பெயரச் செய்யாத
பேரழகி அவள் தென்னை...!

**ரா. ஆக்ஸிலின் ஷைகி**
தாவரவியல் முதுகலை முதலாமாண்டு.



# நட்பு

பசியாற்ற அன்னை உண்டு
பாரம்போக்க தந்தை உண்டு
பாசம் கொடுக்க உடன்பிறப்புகள் உண்டு
ஆறுதல் சொல்ல உறவினர் உண்டு – ஆனால்
என்றும் கரம்கொடுக்க, தோள்கொடுக்க
நட்பு மட்டுமே உண்டு

விழுந்த குழந்தை நடக்க முயற்சிக்கிறது
சிறகொடிந்த பறவை பறக்க முயல்கிறது
விழுந்த மழைத்துளி ஓட ஆரம்பிக்கிறது
நீயும் நானும் தோல்வி அடைந்தோமா? இல்லை
முயற்சியைத் தொடர்வோம்
விடாமுயற்சியோடு ஓடுவோம்
வெற்றியைக் கைவசப்படுத்துவோம்

**அ. அனிஷா பர்வின்**
தாவரவியல் துறை, இளங்கலை மூன்றாமாண்டு

1. பசுமாடு ஏன் பால் தருகிறது? விடை : *அதனால் காப்பி டீ தர முடியாது.*
2. அதிக வெயிட் தூக்குற பூச்சி எது? விடை : *மூட்டை பூச்சி*
3. பொருள் வைக்க யூஸ் பண்ண முடியாத பை எது? விடை : *தொப்பை*
4. குடிக்க முடியாத டீ எது? விடை : *கரண்டி*
5. வெற்றிலையுடன் சேராத பாக்கு எது? விடை : *மைசூர் பாக்கு*
8. தானத்தில் பெரிய தானம் எது? விடை : *மைதானம்*
7. ஆறும் ஆறும் சேர்ந்தால் என்ன வரும்? விடை : *வெள்ளம் வரும்*
8. சாப்பிட முடியாத கனி எது? விடை : *பால்கனி*
9. 100க்கும் 105க்கும் நடுவுல என்ன இருக்கு? விடை : *0 தான் இருக்கு*
10. முட்டையே போடாத பறவை என்ன பறவை? விடை : *ஆண் பறவை*





**பெர்லின் ஜியோனா சே.உ.**
III BA English (SF)



# ஒருதலை

நிச்சயம் இல்லாத இந்த வாழ்க்கைல
நமக்குள்ள இருக்கிற இந்த உறவு
எத்தனை நாள் நிச்சயம்னு எனக்கு
தெரியல... ஆனா நிச்சயமா நீ
வேணும்னு மட்டும் என் மனசு
நிமிஷத்துக்கு நிமிஷம் எதிர்பார்க்குது...
காதல் கூண்டுல உன்ன நான்
அடைக்க விரும்பல கடைசி
வரைக்கும் என் உலகத்துல
என் கூடவே இரு
அதுவே போதும்...!




ச. ரோஸ்மி ஏஞ்சலா
III - BA English (SF)




# யாவும் நீ

யாவும் மறுச்சொல் நீயடா!!!
அவன் என்பதைத் தாண்டி
வேறென்ன காரணம் வேண்டும்
நான் அவனைக் காதலிப்பதற்கு
இன்று மீண்டும் அவன்
இன்று மீண்டும் அவன் வந்தான்
அதே கண்கள்... அதே காதல்
அதே மௌனம்... அதே சிரிப்பு
அதே அன்பு...
ஆனால் கோவம் மட்டும் எங்கு
சென்றதோ தெரியவில்லை!!!


ச.ரோஸ்மி ஏஞ்சலா
III -BA English (SF)




# என் கல்லூரி

விதியென நினைத்து
உன்னுள் கலந்தேன்
என் விதியே
மாற்றிவிட்டாய்

உண்மையான உறவு
கற்றது உன்னிடம்
உண்மையான நட்பு
கற்றது உன்னிடம்
என்னையையே எனக்கு
புதியதாய்க் கொடுத்ததும்
நீதான்

திட்டுகள் வாங்கினாலும்
தட்டிக் கொடுக்காமல்
என்னை விட்டுவிட்டதே
இல்லை

பிரிவுகள் நூறு கண்டேன்
பரிவுகள் நூறு கண்டேன்
திறமைகள் நூறு கண்டேன்
திகட்டாமல் உன்னைப் பெற்றேன்
ஒருவேளை நீ இல்லை என்றால்
என்னை நான் இழந்திருப்பேன்


ந. கீர்த்திகா
வேதியியில் முதுகலை இரண்டாமாண்டு



# போராடக் கற்றுக்கொள்

ந. நிஹாரிகா வானதி
வேதியியல் முதுகலை
இரண்டாமாண்டு

**காகிதக் கப்பலும்**
**கரைசேரப் போராடும்**
**மொட்டு மலரும்**
**இதழை விரிக்கப் போராடும்**
**கலங்கிய கண்களே**
**போராடக் கற்றுக்கொள்**

வாழ்க்கையின் ஒவ்வொரு அணுக்களிலும் போராட்டம் ஒளிந்துகொண்டு இருக்கிறது. அது பிறப்பாகிலும் சரி இறப்பாகிலும் சரி. போராட்டத்திற்குப் பிறகு அப்படி என்ன கிடைத்து விடப் போகிறது என இவ்வுலகம் கேட்கிறது. இவ்வுலகத்தை வென்ற மகிழ்ச்சிதான் கிடைக்கிறது. உன்னால் முடியாது என கூறியவர் முன் முயன்று வென்ற மகிழ்ச்சிதான் கிடைக்கிறது. வாழ்வைக் கற்கும் நம் ஒவ்வொருவருக்கும் போராடும் குணம் இருந்தாலே போதும் இந்த உலகத்தைத் திருப்பிப் போட்டுவிடலாம்.

நம் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையில் ஒரே ஒரு நபர்தான் இருக்கக்கூடும். அவர் யார்? அவள் யார்? அவன் யார்? வேறு யாருமில்லை கண்ணாடி முன் நின்று பாரு அவள் தெரிந்து விடுவாள்.

“உலகில் நான் முழுவதுமாக அறிந்து கொள்ளவேண்டிய ஒரே நபர் தான்” – ஆஸ்கர் வைல்ட்

எனக்குத் தெரியும் நண்பனும் நான் மட்டும் தான். நீ உன்னை முழுவதுமாக ஆராய்ந்து பார் எது உனக்கு முழு பலம் தரும் எது உன்னை வலுவிழக்கச் செய்யும் என உன்னிடம் பாடம் கற்றுக்கொள். ஒன்றை மட்டும் மிகவும் தெளிவாக புரிந்து கொள் உன்னால் முடியாததை இந்த உலகத்தில் யாராலும் செய்ய முடியாது.

நீ குழந்தையாய் இருந்தபோது எல்லோரும் உன்னைத் தூக்கிக் கொள்ள நினைத்தார்கள். ஆனால் நீ மட்டும்தான் நடந்து செல்ல நினைத்தாய், நடந்தாய்! உலகம் போற்றும் விஞ்ஞானி அன்று தெருவிளக்கில் அமர்ந்து படித்தார். இன்று உலகமே அவரைப் படிக்கிறது. உனக்கோ சொந்தமாகவே விளக்கு இருக்கிறது. ஆனால் நீ என்ன செய்கிறாய். உன் நேரத்தைச் சிறிது மகிழ்ச்சி தரும் பொருட்களில் செலவிடுகிறாய். உன் வாழ்க்கையை இன்பமாகக் கழிப்பதும் கழிக்காமல் போவதும் நீ தேர்ந்து கொள்ளும் பாதைதான் முடிவு செய்யும் நீயே முடிவு கொள், காலம் போற்றும் புத்தகமா, இல்லை கசக்கி எறியும் காகிதமா நீ என்று!

* * * * * * * * *



Anu. M.S
II B.Com (SF-2)



சுயநலமான உலகில்,
சுயநலமற்ற ஓர் உறவு
அம்மா ❤



உன்னால் மட்டுமே
நொடியில் என் மனநிலையை
மாற்ற முடிகிறது ❤



உலகிலேயே
அதிக
பாதுகாப்பு
மிகுந்த இடம்
தந்தையின்
கை
மட்டுமே ❤

**N. Shamiya**
II B.Com (SF-2)



**G. Evelin Jovita**
II B.Com (Aided)









**S. Sivajothi**
I M.A. History



**S. Sahaya Halista**




P. Sahaya Jenifer
III B.com (SF II)


Beionaa Augustus
25.06.2023


G. Shebina Nishi
Ist M.Com (SF 1)


Edvina. A
I. B.Com (SF)



S. Antokani
III B.A. Tamil


Saranya. P
I. B.Com (SF)



Sahaya Sajitha. J
III B.Sc. Chemistry




C.M. Kaviya
Ist. M.Com (SF 1)



M. Mebisha Mol
III B.Sc. Chemistry





K. Suriya
III B.Sc. Chemistry



P. Sakthi
III Chemistry







S. Mary Bedrecia
II B.Com (SF -1)



Aksaya. M
II B.Com (SF -2)






HOLY CROSS COLLEGE (AUTONOMOUS)
MERRY CHRISTMAS
EMBRACE
THE MAGIC OF
CHRISTMAS


HOLY CROSS COLLEGE (AUTONOMOUS)
MERRY CHRISTMAS
EMBRACE


MERRY CHRISTM
MAGIC OF
RISTMAS

















9 788197 146367

Assisi Offset Press, Ngl., Cell : 7667729591